# இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் விவசாய பொறுப்பு நிதியத்திலிருந்து 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட முறையே ரூபா 500,000 தொகைக்காகவும் ரூபா 2,000,000 தொகைக்காகவும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய ரூபா 99,375 தொகையான வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டு உணவு மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீளளிப்பு அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 179,703 தொகையான பொருட்களின் பெறுமதி, மீளளிப்பின் போதான கடன்பட்டோர் கணக்கு செலவு வைப்புகளுக்குப் பதிலாக வருமானக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் அத் தொகையால் கடன்பட்டோர் மீதி தீர்க்கப்படாதிருந்ததுடன் வருமானமும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ‘‘இனங்காணப்பட முடியாத’’ மீதி ரூபா 57,000 தொகை இனங்காணப்பட்டு கணக்குகள் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2003 ஆம் ஆண்டின் போது நீர் விநியோகிக்கும் இயந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 19 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 80,610 தொகையான கடன் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 09 உத்தியோகத்தர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 42,080 தொகையான நானாவித கடன்கள் மற்றும் முற்பண மீதி 10 ஆண்டுகள் முதல் நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் அத் தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டின் போது கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த சுவ போஷ மற்றும் மவ்போஷ பொதிகளின் பெறுமதியான ரூபா 64,500 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயங்களுக்கும் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| நிலையான சொத்துக்கள் | 18,771,491 | (i) பொருள் மெய்மையாய்வு அறிக்கை<br>(ii) நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| எஞ்சிய இருப்புகள் | 629,866 | (i) இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள்<br>(ii) பட்டோலைகள்<br>(iii) இருப்புப் புத்தகங்கள் |

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1973 இன் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு அதிகாரச்சட்டம் | பின்வரும் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 3(i) மற்றும் (v) ஆம் பிரிவு | (I) அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலை நடைமுறைக்கு இணங்க சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முகவர்களிடமிருந்து உதவி பெறுதல்<br>(II) சர்வதேச பட்டினி ஒழிப்பு அமைப்புக்கள் மற்றும் ஏனைய அவற்றை ஒத்த வெளிநாட்டு நிறுவனங்கள், அமைப்புகள் அல்லது சங்கங்களுடன் ஒத்துழைத்தல். |
| (ஆ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டமும் 2012 இன் 2 ஆம் இலக்க திருத்தற் சட்டமும் | ஒரு மாதம் முடிவுற்று அடுத்துவரும் மாதத்தின் 30 ஆம் திகதியளவில் சேகரிக்கப்பட்ட பங்களிப்பு பணம் அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் குறித்த தினத்திற்கு மீளாய்வாண்டின் போது பங்களிப்புத் தொகை செலுத்தப்படாமைக்கான மிகை அறவீடாக ரூபா 179,625 தொகையைச் செலுத்த வேண்டியிருந்தது. |
| (இ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |

| | | |
|---|---|---|
| (i) | 4.2.2 ஆம் பிரிவு | கூட்டிணைந்த திட்டமும் பாதீடும், உள்ளபடியான செயலாற்றல் தரவுகளுடன் கிரமமாக மீளாய்வு செய்யப்பட்டு முரண்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 5.1.3 ஆம் பிரிவு | நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் வருடம் ஆரம்பிக்கப்படுவதற்கு ஆகக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை — சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(உ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய திறைசேரிச் சுற்றறிக்கை இல. ஐஏஐ/2002/02 — சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி மற்றும் மென்பொருளுக்காக விபரமான ஓர் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிதிப்பிரமாணங்கள்

| | | |
|---|---|---|
| (i) | நி.பி. 110 | நட்டங்கள் மற்றும் இழப்புப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 177(1) | பெறப்படும் மொத்தத் தொகையும் நாளாந்தமோ அல்லது தாமதமின்றி வங்கியிலிடப்பட வேண்டிய போதிலும் தெகிவளை விற்பனை நிலையத்தில் செலவினங்கள் தீர்க்கப்பட்டதன் பின்னர் அதன் மீதி வருமானம் வங்கியில் இடப்படுகையில் 02 நாட்கள் முதல் 18 நாட்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது. |
| (iii) | நி.பி. 371(2)(இ) பந்தி | செயற்பாடு பூர்த்தியானதை உடனடுத்து வழங்கப்பட்ட முற்பணத்தை தீர்க்க வேண்டிய |

போதிலும் 2011 ஆம் ஆண்டின் 08 உத்தியோகத்தர்கள் பெறப்பட்டிருந்த ரூபா 240,000 தொகையான முற்பணங்களும் மீளாய்வாண்டின் 05 உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்ட ரூபா 626,725 தொகையான முற்பணத் தொகை மீளாய்வாண்டின் இறுதியிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நி.பி. 751(1) மற்றும் 754 — சபையில் செயற்படும் எவ்வித செயற்திட்டத்திற்காகவும் பொருட் பதிவேடு மற்றும் இருப்புப் பதிவேடுகள் முறையாக பேணப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் சபையின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 8,142,953 பற்றாக்குறையானதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான தேறிய பற்றாக்குறை ரூபா 6,471,589 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 1,671,364 தொகையான வீழ்ச்சிக்காக ரூபா 20,949,210 தொகையான அரசாங்க மானியத்தின் குறைவும் ரூபா 7,043,561 தொகையான சபையின் வருமானத்தின் குறைவும் முக்கிய காரணமாகியிருந்தன.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டிற்குமான நிதி விளைவுகளின் பல்வேறு கட்டங்களில் வேறுபாடுகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான | |
|---|---|---|
| | 2012 | 2011 |
| | ரூபா | ரூபா |
| அரசாங்கப் பங்களிப்பு | 37,703,796 | 70,335,762 |
| ஏனைய வருமானம் | 14,700,055 | 21,743,616 |
| செலவினம் | 45,846,749 | 76,807,351 |
| மிகை(பற்றாக்குறை) | (8,142,953) | (6,471,589) |
| நடைமுறைச் சொத்துக்கள் | 19,138,120 | 24,728,555 |

| | | |
|---|---|---|
| நடைமுறைப் பொறுப்புகள் | 12,641,768 | 17,185,489 |

## 3. செயலாற்றல் மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சட்டரீதியான உரித்தற்ற காணிகளின் பேணப்பட்டுவந்த பின்வரும் பண்ணைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 6,590,370 தொகையான செலவினத்தை ஏற்றிருந்த போதிலும் அவற்றில் ரூபா 5,391,047 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. அப் பண்ணைகளில் செயற்படுத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்ட நானாவித செயற்திட்டங்களின் இலக்கிடப்பட்ட செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டிராத போதிலும் ஒரு அலகிற்காக ஏற்கப்பட்ட இலக்கிடப்பட்ட செலவினங்களின் அதிகரிப்பு 28% முதல் 382% வரையான வீச்சில் காணப்பட்டது.

| செயற்திட்டம் | காணியின் அளவு | தற்போதைய நிலை | 2012 ஆம் ஆண்டிற்கு உரித்தான செலவினம் |
|---|---|---|---|
| புத்தல பண்ணை | 10 ஏக்கர் | 2012 செப்தெம்பர் மாதம் முதல் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 1,629,037 |
| தனமல்வில பண்ணை | 16 ஏக்கர் | 2012 செப்தெம்பர் மாதம் முதல் ஏற்பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | 1,268,272 |
| வட்டக்கச்சி | 125 ஏக்கர் | 2012 நவம்பர் மாதம் முதல் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | 3,693,061 |

6,590,370
========

(ஆ) சபையின் சுய நிதியத்திலிருந்து செயற்படும் 04 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 4,893,288 தொகையான நட்டம் பெறப்பட்டிருந்தது.

(இ) சந்தை மற்றும் கைத்தொழில் தொடர்பான எவ்வித சாத்தியவளக் கற்கையும் இன்றி ஆரம்பிக்கப்பட்ட விலமுல்ல பழச்சாறு உற்பத்தி செயற்திட்டத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 541,040 தொகையான நட்டம் ஏற்பட்ட காரணத்தால் அவ் உற்பத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்கு சட்டரீதியான உரித்தற்ற காணிக்கு ரூபா 8,789,750 தொகையான செலவில் அரிசி மா நூடில்ஸ் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி அடிப்படைச் செலவினமாக ரூபா 520,729 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிராமையால் அச் செயற்திட்டம் பின்னர் கைவிடப்பட வேண்டியிருந்தது.

## 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) விவசாய பொறுப்பு நிதியத்தின் 4 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 5,020,833 தொகையான கடன் தொகை 2013 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டு பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அக் கடன் தொகையில் ரூபா 479,167 தொகை மாத்திரம் மீளச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வட்டக்கச்சி பண்ணையில் 2012 நவம்பர் மாதம் முதல் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் நிறுவகத்திடமிருந்த ரூபா 1,545,000 பெறுமதியான அறுவடை இயந்திரம் 2013 ஒக்டோபர் 30 ஆம் திகதி வரையிலும் மீளப் பொறுப்பேற்பதற்கோ அல்லது அப் பெறுமதியை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஒக்டோபர் 01 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொது முயற்சிகள் தொடர்பான சபையில் பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- திருத்தப்பட்ட அதிகாரச்சட்டம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.
- திருத்த வேலைகள் கைவிடப்பட்டுள்ள இதிகடுவெவ மற்றும் வெலி வெவ மீளமைப்புகள்
- நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ள இனங்காணப்படாத மீதிகளை அகற்றல்.
- செயற்திட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறல்.

(ஈ) கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஓர் போசனப் பொதியை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட போசனப் பொதிகள் சமுர்தி ஆணையாளர் திணைக்களத்தின் மூலம் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் இரு தரப்பினருக்கிடையே ஏற்படுத்தப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கையொப்பமிடப்படாது 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,631,500 பெறுமதியான 3263 போசனைப் பொதிகள் சமுர்த் ஆணையாளர் திணைக்களத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

செயற்திட்டம் ஒன்றை செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் இன்றி சபைக்கு சட்டரீதியான உரித்தற்ற ஓர் காணியில் வேலியையும் கதவும் நிர்மாணிக்கப்படுவதற்கு ரூபா 2,548,050 பெறுமதியான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்தப்பட்டிராமையால் மேலதிக வேலை உள்ளடங்கலாக சகல செலவினங்களுக்குமாக ரூபா 3,209,728 தொகையான நட்டஈட்டுத்தொகையைச் செலுத்துமாறு சட்ட நிறுவனமொன்றின் மூலம் ஒப்பந்தக்காரர் கோரிக்கைப் பத்திரம் அனுப்பிவைத்திருந்தார்.

## 3.4 விளைவற்ற சொத்துக்கள்

பின்வரும் இயந்திரம் செயற்பாடற்ற நிலையில் கலங்குட்டி அரிசி மா பதனீட்டு நிலையக் களஞ்சிய வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

| விபரம் | அளவு | செயற்பாடின்றி நிலவிய காலம் (வருடம்) |
|---|---|---|
| அரிசி மா உற்பத்தி இயந்திரம் | 02 | 01 |

| | | |
|---|---|---|
| மா அரிக்கும் இயந்திரம் | 01 | 01 |
| குதிரை வலு 15 மோட்டார் | 01 | 01 |
| உழுத்தம்மா திரிக்கும் இயந்திரம் | 01 | 05 |

(ii) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சுவந்தெல் ஸ்லோ புட் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த பின்வரும் பொருட்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

| **விபரம்** | **அளவு** | **பெறுமதி** |
|---|---|---|
| | | **ரூபா** |
| மின் வெதுப்பான் | 02 | 152,872 |
| பேஸ்ரி இயந்திரம் | 01 | 340,000 |
| பேஸ்ரி கலக்கும் இயந்திரம் | 01 | 187,500 |
| பாண் வெட்டும் இயந்திரம் | 01 | 112,500 |
| | | 792,872 |

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

ஒரு கிராமத்திற்கு ஒரு பயிர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொனறாகலை மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கலு தெஹி செயற்திட்டம் தோல்வியுற்ற காரணத்தால் இதற்காக தேவையான இயந்திரங்களும் வெதுப்பான்களும் கொள்வனவு செய்யப்படுவதற்கு செலவிடப்பட்ட ரூபா 6,615,581 தொகை சிக்கனமற்ற செலவினமாகியது.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

நிரந்தர மற்றும் ஒப்பந்தமயமாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 76 ஆன போதிலும் உள்ளபடியான பதவியணி 34 ஆனமையால் வெற்றிடமான பதவியணி எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 55% ஆகக் காணப்பட்டது.

## 3.7 வாகனப் பயன்பாடு

பழுதுபார்த்தல் செலவினம் அதிகரித்த காரணத்தால் ரூபா 1,191,190 கிரயமான 3 வாகனங்கள் ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டியுள்ளது.

(அ) நிதிக் கட்டுப்பாடு

(ஆ) பதவியணி முகாமைத்துவம்

(இ) செயற்திட்ட முகாமைத்தும்

(ஈ) சொத்துக் கட்டுப்பாடு